சத்திய வேத

# பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

**யாழ்ப்பாண மேற்றிராசன மறைக்கல்விப் பரீட்சை — 1970**

மேற்படி மறைக்கல்விப் பரீட்சைக்கான — 4ஆம், 5ஆம் வகுப்புக்கான மாதிரி வினாக்களை 4ஆம் பக்கத்திற் பார்க்கவும்.

95-ம் புத். | 1970-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 3-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 37-ம் இல.

## விமானக் கடத்தல் சமாதானத்தைப் பின்போடுகின்றது

இரண்டு வாரங்களுக்கு முன் மத்தியகிழக்குப் பிரதேசத்திலே, "அரபுக் கொமாண்டோஸ்" என்பவர்களால் நடத்தப்பட்ட பல சர்வதேச விமானக் கடத்தல்களைப் பரிசுத்த பாப்பரசர் காரசாரமாகக் கண்டித்திருக்கிறார். "இத்தகைய நீதிகெட்ட செயல்கள் தற்போது உத்தேசத்திலிருக்கும் சமாதான முயற்சிகளை வேரில் அறுத்துவிடுகின்றன" என்றார் பரிசுத்ததந்தை. ஆகாய விமானத்தில் சாதாரண பிரயாணி போல் வேஷந்தாங்கி உட்பிரவேசித்துப் பின்பு துப்பாக்கிமுனையில் விமானிகளைப் பயமுறுத்தித் தாம் விரும்பிய இடங்களுக்குக் கடத்தல் செய்வது இந்நாட்களில் ஒரு பொதுவான செயலாகிவிட்டது கண்டு இத்தகைய செயல்களை நிற்பாட்டத் தீவிர நடவடிக்கைகளைக் கையாள விமானக் கம்பனி அதிகாரிகளும், பல அரசாங்கங்களும் முடிவு செய்திருக்கின்றன.

## ஹங்கேரி தேசத்துக்குப் பாப்பரசரின் வேண்டுகோள்

ஹங்கேரிதேசத்தில் கிறிஸ்தவ போதனை கொண்டுசெல்லப்பட்டு ஆயிரம் வருடம் நிறைவுபெற்றுவிட்டது. இதை ஹங்கேரி மக்கள் யாவருக்கும் பரிசுத்த தந்தை நினைவூட்டி அந்நாட்டிலுள்ள பொதுமக்களுக்கு விசேஷமான ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். அந்நாட்டில் குருத்தொண்டு புரிவோருக்கு தோளோடு தோள்நின்று உதவுமாறு பரிந்து கேட்டிருக்கின்றார். இத்தகைய உதவியை இல்லறத்தோர் தமது குருமாருக்குக் கொடுக்காவிடில் ஞான வெளிச்சம் நூர்ந்து போகும் ஆபத்தையும் எடுத்துக்காட்டி வாழும் இல்லங்களிலேயும், தொழில்புரியும் மக்கள்மத்தியிலேயும் யேசுக்கிறிஸ்துநாதரின் சாட்சிகளாக விளங்கத் தூண்டியிருக்கிறார்.

## அரபுக் குடியரசு அதிபர் நாஸர் அவர்களின் மறைவு

ஐக்கிய அரபுக் குடியரசின் அதிபரும், அரபு உலகின் தன்னிகரற்ற தலைவருமாக விளங்கியவருமான கேணல் கமால் அப்துல் நாஸர் அவர்கள் சென்ற 28-9-70 செவ்வாயன்று (இலங்கை நேரம் இரவு சுமார் 9 மணி) மாரடைப்பினால் காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் மூன்றாம் நாள் வியாழனன்று அமைதியாக நடந்தேறின. அன்று பிற்பகல் நைல்நதியின் கரையிலே நாஸர் நல்லடக்கம் செய்யப்பட்டார்! உலக நாடுகளெல்லாம் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தி நின்றன. எதிர்பாராத இவரது திடீர் மறைவு அரபு உலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

## திரு. S. W. R. D. பண்டார நாயகாவுக்கு அஞ்சலி

S. W. R. D. பண்டார நாயகாவின் 11-வது சிரார்த்ததினம் சென்ற புரட்டாசி மாதம் 26-ம் திகதி, இந்நாட்டின் பல பாகங்களிலும், இந்தியாவில் சென்னை, புதுடெல்கி ஆதியாம் நகரங்களிலும் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அமைதியான ஊர்வலங்களும், பாராட்டுப் பேச்சுகளும் இக்கூட்டங்களிற் பிரதான இடம்பெற்றன. யாழ். நகரமண்டபத்திலும் அநுதாபிகள் ஒன்றுகூடி அவர் சிறப்பை ஞாபகப்படுத்திக்கொண்டனர். பொதுமக்களுக்கு இந்நாட்டு ஆட்சியில் பிரதான பங்குண்டு என்ற விழிப்புணர்ச்சியை முதல் முதல் இந்நாட்டில் தட்டி எழுப்பியவர் திரு. S. W. R. D. பண்டாரநாயகாவே என முழங்கப்பட்டது. கொழும்புமா நகரத்திலும், அவரது கிராமத்தலமாகிய ஹொறகலவிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி அவரது சிலைக்கும், சமாதிக்கும் மலர்மாலைகள் மலையெனக் குவித்து வணக்கம் செலுத்திக் கொண்டனர். பிரதமர் சிறிமா பண்டாரநாயகாவும், அவரது புத்திரன் அநுராவும் இவ் வணக்கத்தில் தலைமை தாங்கி மக்களின் உணர்ச்சியின் மையமாக விளங்கினர். முன்னாள் இந்திய மந்திரியாகிய திரு. K. R. S. மேனன் புதுடெல்கியில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் திரு. பண்டாரநாயகா பிரசித்திபெற்ற உலகப் பிரசையெனவும், திருமதி சிறிமா பண்டாரநாயகா, தன் கணவனது நோக்கத்தைப் பூர்த்தி செய்யும் சிறந்த அரசியல் ஞானி எனவும் இருவர்க்கும் புகழ்மாலை சாற்றினார்.

## தொழிலாளரை வேலையில் நின்று நீக்காதீர்

அண்மையில் தொழில் மந்திரி திரு. M. P. Z. சிறிவர்த்தன தொழிலாளர் சம்பந்தமாக நியமித்த ஆராய்வுக் குழுவினருக்கு தாம் சமர்ப்பித்த மகஜரில் இளம் கிறிஸ்தவ தொழிலாளரை, இக்கட்டான இந் நிலைமையில் தொழிலாளரை வேலையில் நின்று நீக்கும் யோசனைகளுக்கு இடங்கொடுக்கவேண்டாமென விண்ணப்பித்திருக்கின்றார். பொருளாதார கஷ்டத்தினால் பல தனியார் ஸ்தாபனங்கள் தொழிலாளர் பலரை வேலையிலிருந்து நீக்குவதுபற்றி யோசித்து வருவதாகவும், அவ்வாறு நேரிடுமாயின் மக்கள் நிலைமை பரிதாபத்துக்குரியதாகுமெனவும் சுட்டிக்காட்டியிருக்கின்றார். பொலிஸ் அதிபர் திரு. ஸ்ரான்லி செனநாயகாவும் அண்மையில் இதுபற்றி விடுத்த அறிக்கையில் இத்தகைய வேலைநீக்கங்கள் ஏற்படுமாயின் அதன்பயனாக வேலைநிறுத்தங்கள் ஏற்படுமென எச்சரித்திருக்கிறார்.

## பீற்றர்பிள்ளை சுவாமியாருக்கு மேலும் ஒரு ஞாபகச் சின்னம்

காலஞ்சென்ற பீற்றர் பிள்ளை சுவாமியாரின் ஞாபகத்தில் சென்ற புரட்டாசிமாதம் 28-ம் திகதி மேலும் ஓர் ஞாபகச் சின்னம் நிறுவப்பட்டிருக்கின்றது. அதுவும் ஓர் வாசிகசாலையே. இவ்வாசிகசாலையைச் சுவாமியாரின் மூத்த சகோதரனாகிய சங்கைக்குரிய பீற்றர் லூக் அவர்களே திறந்து வைத்தார். இது கொழும்பு முகத்துவாரத்திலுள்ள டி. லா சால சமூக நிலையத்தில் நிறுவப்பட்டிருக்கின்றது. சுவாமியாரின் ஞாபகத்துக்கென மிகப்பொருத்தமான நிறுவனம் வாசிகசாலைகளே எனக் கருதப்பட்டு வருவதால் இது அவருடைய பெயரால் விளங்கும் 6-வது வாசிகசாலையாகும்.

## பிச்சைக்காரருக்கு ஒரு நிலையம்

சென்றவாரம் கொழும்பு நகரசபை அங்கத்தினர் கூட்டத்தில் திரு. ஆனந்த பிரேமசிங்க கொழும்புநகரில் பிச்சைக்காரர் தங்குவதற்கென ஒரு நிலையம் அரசாங்கம் நிறுவவேண்டுமெனக் கேட்டிருக்கிறார். கொழும்புநகரில் மாத்திரமன்றி, மறு பட்டணங்களிலும் பிச்சைக்காரர் பகலிலோ, இரவிலோ தங்க இடமின்றி, வெய்யில், மழை, பனி குளிரென எல்லாக் கொடுமைகளையும் தாங்கிக் காலங்கழிக்கின்றனர். இவர்களுக்குச் சற்று ஆறுதலேனும் அளிப்பதற்கு இந்நாட்டிலுள்ள தர்மவான்களையும், தர்மஸ்தாபனங்களையும் அறைகூவி அழைக்கின்றார் கண்டி குருமார் பயிற்சிச்சாலைத் தலைவர்களில் ஒருவராகிய வணக்கத்துக்குரிய குக் சுவாமியார். இந்தக் குரவரின் முயற்சியின் பயனாக இப்பிரச்சனை எவ்வாறு தீர்க்கப்பட வேண்டுமென்று பல சமயத்தவரும் ஒன்றுகூடி ஆலோசித்துவருகின்றனர்.

## 40 வேதசாட்சிகள் திருச்சடங்கில் ஆங்கில சங்கீதமே தொனிக்கும்

ஐப்பசிமாதம் 25ஆம் திகதி புனித பேதுரு மாதேவாலயத்தில் 40 வேதசாட்சிகளுக்குப் பட்டம் அளிக்கும் திருச்சடங்கின்போது ஆங்கில சங்கீதமே தொனிக்கவேண்டுமென்று பரிசுத்த தந்தை 6ஆவது சின்னப்பர் சித்தமாயிருக்கின்றார். ஆங்கில மேற்றிராணிமார் இத்தகைய விருப்பமுடையவர்களாயிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்ட பரிசுத்த தந்தை சம்பேதுருவாலய சங்கீதத்தலைவரை அழைத்து ஆங்கிலதேச மேற்றிராணிமாருடைய விருப்பத்தை பூர்த்திசெய்யச் சகல ஆயத்தங்களும் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். வெஸ்ற்மினிஸ்ரர் மகாதேவாலய ஆங்கில பாடகர்குழுவினர் அன்று வத்திக்கானில் பாடுவார்கள் இதுவரையும் 8000 பக்தர்கள் சம்பேதுரு தேவாலயத்தில் பிரசன்னமாயிருக்கச் சீட்டுக்களுக்கு விண்ணப்பித்திருக்கின்றனர். அன்று தேவாலயத்தில் பாடப்படும் சங்கீதங்கள் ஆங்கில ரியூட்டர் மன்னர் காலத்தனவாக இருக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. ஆங்கில கிறிஸ்தவ சபைத்தலைவர் டக்டர்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## பாப்பரசரது இராணுவசேனை

அவசிய பாதுகாப்புக்குத் தேவைப்படும் "சுவிஸ் காட்ஸ்" என்னும் காவல் வீரரை ஒழிந்த ஏனைய இராணுவ படைகளை எல்லாம் வத்திக்கான் சேவையிலிருந்து அகற்றிவிட பாப்பரசர் தீர்மானித்திருப்பதாக வத்திக்கான் அறிக்கையொன்று கூறுகின்றது.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவனருகில்

திருமதி. மார்கிறற் சவரிமுத்து

அழகும் அமைதியும் ஒருங்கே அமையப்பெற்று சகலவிதமான சௌகரியங்களும் நிறைந்து விளங்குகிறது பண்டத்தரிப்பு ஞானஒடுக்க இல்லம். யாழ். மேற்றிராசன ஆயர் செலவு, சிரமம் பாராது நிறுவித்தந்த இவ்வில்லம் மேற்றிராசனத்தார் அனைவரினதும் வருங்கால முன்னேற்றத்திற்குச் சிறந்த ஒரு சாதனமாய் அமைந்துள்ளது. பக்தி ஊட்டி, மனநிலையை ஒரு நிலைப்படுத்த உதவும் இவ்விடம் ஆன்ம, உள, சரீர சோர்வு போக்கிப் புத்துயிர் அளிக்கும் தன்மையுடையது என்றால் மிகையாகாது. அண்மையில் இங்கு தியானத்தில் ஈடுபட்டுப் பயன்கண்ட குருமாரும் ஆசிரியப் பெண்மணிகளும் இதற்குச் சான்று பகர்வர்.

பல பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியைகள் புரட்டாதி 6ஆந் திகதி பண்டத்தரிப்பில் கூடினர். தங்கள் குடும்பத் தொல்லைகளைச் சற்று மறந்து, அன்றாட பரபரப்புகளை ஒதுக்கிவிட்டுத் தியான இல்லத்தில், இறைவன் சந்நிதானத்தில் அமர்ந்து இரு தினங்களைக் கழிக்க வந்திருந்தனர். எழிலும், ஏகாந்தமும், பரந்த இடமும், சுகந்த சுவாத்தியமும் புழக்க வசதியும் வாய்ந்த இம் மடத்தில் காணப்பட்ட புனிதம் அவர்கள் உள்ளங்களைத் தொடாமலிருக்கவில்லை. மடத்துப் பரிபாலகரான திருக்குடும்பக் கன்னியர் சகல காரியங்களையும் அன்புடனும் ஆற்றலுடனும் கவனித்தனர். கன்னியர்களினது பழுவான அலுவல்களில் பங்கு கொண்டு மறைவிலிருந்து உழைத்தனர் சில பிள்ளைகள். அவர்கள் ஆதரவும் கண்காணிப்பும் தனிப்பட்டவரின் தேவையும் வசதியும்நோக்கிச் செயல்பட்டது பாராட்டுக்குரியதே.

மாகாணத் தலைவி அதிசங்கைக்குரிய யூலலி தாயார் அவர்கள் ஆசிரியைகள் எழுபதிற்கு அதிகமானோர் அங்கு கூடியிருந்ததையிட்டுத் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தார். அவர்களுக்கு எவ்வித தேவை யிருந்தாலும் அதை நிர்வாகத்தரிடம் தயக்கமின்றி அறிவிக்க வேண்டுமென்றும் அதற்குத் தம்மாலான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உறுதிகூறினார்கள். அன்பும் பண்பும் நிறைந்த அவர்களது உரை ஆசிரியைகளை வரவேற்று உபசரிக்கும்முகமாய் அமைந்தது.

ஆசிரியர்மீது தாம் கொண்டுள்ள தனி அக்கறையும் அன்பும் தூண்ட அயராது உழைத்து இத் தியான நிகழ்ச்சியை ஒப்பேற்றினார் எங்கள் அரிய பிதா அதிவண. பாலசுந்தரம் அடிகளார். அவர் நடத்திய கருத்தரங்குகளின் போது ஆசிரியைகள் தங்கள் பாடசாலை வாழ்வில் அவ்வப்போது எழும் பிரச்சினைகளைப் பற்றி மனம் திறந்து சல்லாபித்தனர். ஆசிரியர் பெற்றோர் தொடர்பு, மூதியவர் மறைக்கல்வி, அரசினர் பாடசாலையில் கிறிஸ்தவ ஆசிரியர், ஆசிரியரும் உடை ஒழுக்கங்களும் இவை போன்ற விஷயங்களை விவாதித்துத் தீர்வுகள் காண முயன்றனர். இறுதி நாளன்று யாழ் மாநில உதவி வித்தியாதிபதி திருமதி பாமர் அவர்கள் மாணவரின் வாழ்வை சீர்நிலைப் படுத்தக்கூடியது அன்பே; அன்பின் மூலமே ஆசிரியர்கள் குழந்தைகளின் பழக்க ஒழுக்கங்களைத் திருத்த வேண்டுமென்பதைக் குறித்துக் கனிவுடன் சிறந்த உரையாற்றினார்கள். ஆசிரியக் கலாசாலை முன்னாள் அதிபர் திரு. அரசரட்ணம் அவர்களும் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசினார். ஞான ஒடுக்கத்திற் பங்குபற்றிய ஆசிரியை ஒருவர் ஆசிரியத் தொழில் ஆண்டவனின் அழைப்பு, வெறும் பிழைப்பன்று என்பதை வற்புறுத்தி கிறிஸ்தவ உருவாக்கலில் கையாளப்படவேண்டிய புது முறைகளை விரிவாக எடுத்துக் கூறினார். இச்சல்லாப நிகழ்ச்சிகள் சகலருக்கும்பயன் தரும் முறையில் நடந்தேறின.

வண. பிதா இம்மானுவல் அடிகளார் தமக்கேஉரிய அறிவுத்திறனுடனும் அமைதிப் பாங்குடனும் தியான நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும் வெகு விமரிசையுடன் நடத்தினார். செவிட்டூமையாய் இருந்தவனைப் பார்த்து யேசுநாதர் கூறிய வார்த்தைகளை நினைவூட்டி இறைவன் வருகைக்கு உள்ளங்களைத் திறக்கும்படியாய்ப் பணித்து சிந்தனையைத் தூண்டும் முறையில் திரு உரை நிகழ்த்தியது கவர்ச்சிகரமாயிருந்தது. ஒவ்வொரு ஆசிரியையும் திருமுழுக்கு காரணமாய் "இறைமகள்" வரிசையில் இடம்பெற்று கிறிஸ்துவின் குரு அரச இறைவாக்குரைக்கும் அலுவலில் பங்கு கொள்ளும் விதத்தை விரிவாய் விளக்கினார். திருவழிபாட்டிலும் நற்கருணை ஆராதனையிலும் யாபேரும் பயன்தரும் முறையில் பங்கு பற்றுவதில் விசேஷ கவனம் செலுத்தப்பட்டதும் தியானக் குறிப்புகள் பொருத்தமுடையனவாய் பங்குபற்றியவரின் வாழ்க்கையைத் தொடுவதாய் அமைந்திருந்தன. அன்பின் அத்தியாவசியம், இறைபணி பிறர் பணியைச் சார்ந்து செல்வத்தின் இன்றியமையாத்தன்மை ஆசிரிய அழைத்தலின் உன்னதமாண்பு, மரியன்னை பெண்களின் வழிகாட்டியாய் மீட்புத் திட்டத்திலும் சமூகப்பணியிலும் எடுத்த பங்கின் மேன்மை ஆகிய அனைத்தும் நம் உள்ளத்தில் மூன்றெருபோதும் ஏற்படாத வகையில் வலியுறுத்தப்பெற்றன.

இடைவேளையை ஆசிரியர் தமக்குத் தேவையான சிறு பணிகளிலும் தோட்டப்பராமரிப்பிலும் செலவழித்தார்கள். அதைவிட நல்வாசினையிலும, நற்சிந்தனையிலும், வாழ்க்கைப் பெறுமதிகளைப் பற்றிய ஆய்வுகளில் ஈடுபடுவதிலும் நேரம் கழிந்தது. எந்நேரமும் அமைதி நிலவிய வண்ணமிருந்தது. போசன வேளையிற்தானும் இசைத்தட்டுக்கள் மாத்திரம் நிசப்தத்தைக் குலைத்தன. எல்லோரும் மகிழ்வுடனும் உற்சாகத்துடனும் காணப்பட்டார்கள்.

உண்மையாகவே இத்தியான நாட்கள் ஒரு மறக்கமுடியாத அனுபவமாய் முடிந்தன. இதில் பங்குபற்றியோர் அழைக்கப்பட்டவருள் தெரிந்தெடுக்கப்பட்டவர் போன்று ஓர் உணர்ச்சி வரப்பெற்றனர். இன்னொருமுறை இவ்வாய்ப்பு நமக்குக் கிட்டாதோ என்று விரும்பும் மனநிலை அவர்களிடம் தோன்றியது. இறுதித்தினமன்று நம் ஆயர் அதிவந். எமிலியானுஸ் ஆண்டகை திருப்பலி நிறைவேற்றி நம்முடன் காலை உணவருந்தி நம்மைக் கௌரவித்தார். இவ்வரிய தியான அனுபவ சந்தர்ப்பத்தை நமக்குச் சாத்திய மாக்கியத்திற்கு அவருக்கு நம் மனப்பூர்வமான [illegible]

# திருக்குடும்பக் கன்னியர்மடத்தில் நடைபெற்ற மன்னார் மாவட்டக் கத். ஆசிரியர்களின் கருத்தரங்கு

யாழ்ப்பாண மேற்றிராசனக் கத்தோலிக்க சமயக்கல்வி ஆலோசகர், வண. பிதா G. T. பாலசுந்தரம் அவர்களின் தலைமையிலும், வண. பிதா K. B. சந்தியாப்பிள்ளை, வண. பிதா லூயிஸ் பொன்னையா அவர்களின் ஆதரவிலும், புரட்டாசித் திங்கள் பதினொலாம் பதினைந்தாம் திகதிகளில் கருத்தரங்கு மிகச்சிறந்த முறையில் நடைபெற்றது.

பதினொலாந்திகதி காலைஒன்பது மணிக்கு ஆசிரியர் அனைவரும் புனித சவேரியார் பெண்கள் கல்லூரிமண்டபத்தில் குழுமியிருந்தனர். வண. பிதா R. யோசவ் அவர்கள் விவிலியத் திருவழிபாட்டுடன் மேற்படி கருத்தரங்கை ஆரம்பித்து வைத்தார். வண. பிதா. K. B. சந்தியாப்பிள்ளையவர்கள் தலைமை தாங்கினர். அவர் தமது ஆரம்ப உரையில் தற்கால மருத்துவ நிபுணர்கள் தங்களது விஞ்ஞான ஆராய்ச்சியின்பயனாக நவீன மருத்துச்சாதனங்களையும் ஜீவசத்துக்களையும் கண்டுபிடித்து, ஊசிமூலம் அவற்றை உட்செலுத்தி மக்களின் உடல்நோய் உளநோய் முதலியவற்றைப் போக்கி உயிர்களைக் காப்பாற்றி வருகிறார்கள். இஃது இப்படியாயின் அதேவிஞ்ஞான யுகத்தில் வாழ்ந்துவரும் கத்தோலிக்க ஆசிரியர்களாகிய நாமும் எமது திருமறைக்கல்விவளர்ச்சியில் ஏன் இத்தகைய நவீன சாதனங்களைக் கைக்கொண்டு ஒழுகக்கூடாது என இரத்தினச் சுருக்கமாகக் கூறிநின்றார்.

அடுத்து யாழ்ப்பாணத் திருக்குடும்பக்கன்னியர் ஆங்கிலபாடசாலை ஆசிரியை திருமதி மாக்றெட் சவிரிமுத்து அவர்களால் கத்தோலிக்க ஆசிரியர்களின் அழைப்பு மிக உன்னதமானது என்றும், குருத்துவத்துக்கு அடுத்த அந்தஸ்து என்றும், வருங்காலம் நம்சமயத்தின் வளர்ச்சி, சமூகத்தின் மறுமலர்ச்சி இவையாவும் கத்தோலிக்க ஆசிரியர்களாகிய நமது கரங்களிலேதான் தங்கியுள்ளதென்றும், சொற்சுவை பொருட்சுவை நிறைந்த அழகியதோர் சொற்பொழிவாற்றப்பட்டது.

வண. பிதா G. T. பாலசுந்தரம் அவர்களால் "பாடசாலைகள் இன்று இருக்கும் நிலையில் கத்தோலிக்க ஆசிரியர்களின்பணி" என்ற விடயம் பற்றி மிகச்சிறப்பானதோர் உபந்நியாசம் நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்து அதேவிடயம்பற்றி ஆய்வுக்குழுவும், மேடைப்பேச்சும் நடைபெற்றது. வண. பிதா H. S. ஜெபநேசன், லூயிஸ் பொன்னையா, R. யோசவ், K. B. சந்தியாப்பிள்ளை, L. R. ஜெயசீலன் ஆகியோர் இந்த ஆய்வுக் குழுக்களில் பெரும்பங்கெடுத்து. ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களை உற்சாகப்படுத்திவிட்டமை, மிகவும் மகிழ்ச்சிதரும் நிகழ்ச்சியாகும்.

பி. ப. இரண்டு மணிக்கு மேற்படி கருத்தரங்கம் தொடர்ந்து நடைபெறலாயிற்று புனித சவேரியார் ஆண்கள். கல்லூரி அதிபர் சங். சகோதார் யோசவ் கில்லறி அவர்களால் தேவதிரவிய அனுமானங்கள் பற்றிய விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது. தேவதிரவிய அனுமானம் பொருட்களுமல்ல, கருவிகளுமல்ல, ஆனால் அவற்றின்மூலம் நாம் கிறீஸ்துவைச் சந்திக்கிறோம், அவருடைய பிரசன்னம் நம்மோடு இருக்கிறது என்றும் திவ்வியபூசைநேரத்திலும், தேவநற்கருணை வாங்கும்போதும்மட்டுமல்ல, யேசு எப்போதும் நம்மோடு பிரசன்னராய் இருக்கிறார் என்பதை முக்கியமாக நாம் கவனிக்க வேண்டுமென்றும் தேவதிரவிய அனுமானங்களை நாம் பெறும்போது கெடுகலும் அவருடைய கடவுட் தன்மையை உணருகிறோமே ஒழிய அவருடைய மனுஷீகத்தைப் பற்றி அதிகம் சிந்திப்பதில்லையென்றும், நாம் கிறீஸ்துவ வாழ்வு வாழவேண்டுமானால் தேவதிரவிய அனுமானவாழ்வு வாழவேண்டுமென்றும், இதை நாம் மாணவர்களுக்கு முக்கியமாக எடுத்துக்காட்டவேண்

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

வானொலி நாடக விமரிசனம்

# எழுதிய கரம்

22-9-70 அன்று மாலை இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்ட திருமறைக் கலாமன்றத்தினரின் "எழுதிய கரம்" என்ற இசை, உரை நாடகத்தைக் கேட்டு இரசித்தேன். இந்த உலகில் மனிதர்கள் எல்லோரும் தவறு செய்கிறார்கள்தான். ஆனால் தவறுசெய்தவனை ஒரேயடியாகத் தீர்ப்பிட்டுத் தண்டனை வழங்குவதிலும் பார்க்க பிறர்நேசமனப்பான்மையோடு, அவனை மன்னித்து, அவன் திருந்தி நேரான வாழ்க்கைப் பாதையிலே நிமிர்ந்து நடைபோட ஒரு சந்தர்ப்பம் கொடுப்பதே சிறந்தவழி. இதனை யேசுநாதர் வேதபாரகர் பரிசேயரின் மூடக் கொள்கையைக் கண்டித்து, விபச்சாரிக்கு மன்னிப்புக் கொடுத்த ஒரு செயலில் இருந்து நமக்குப் படிப்பிக்கின்றது இந்த நாடகம். ஆம், மனிதன் தன்னில் உள்ள தவறை மறந்து பிறருக்குத் தீர்ப்பிட, பிறரை வஞ்சம் தீர்க்க முனைவது எவ்வளவு மடமைத்தனம். "உங்களில் பாவம் இல்லாதவர்கள் யாராவது இருந்தால் முதலில் அவன்மேல் கல்லை எறியட்டும்." ஒரே ஒரு வசனம், பிழை பிடிக்க வந்தவர்கள் தலை தெறிக்க ஓடிவிட்டார்கள். உலகிலே பாவச் சேற்றிலே புரண்டெழுந்து மீள வழியறியாது திண்டாடும் பாவிகளுக்கு நம்பிக்கையை ஊட்டும் அருமையான படிப்பினை.

இந்தச் சிறந்த படிப்பினைகளையெல்லாம் சுவையான முறையிலே சேர்த்து, கை தேர்ந்த நடிகர் கையிலே கொடுத்து, நல்லதோர் கருத்துக் காவியமாகத் தொகுத்துத் தந்துள்ளார் நீ. மரியசேவியர் அவர்கள். கேட்டோருக்கு அரை மணித்தியாலம் அரை நிமிடமாகவே கழிந்துவிட்டது. நடிகர்கள் வழமைபோல் தமது பாத்திரங்களைத் திறம்படச்செய்து முடித்தார்கள். விபச்சாரியாக நடித்த செல்வி, ஜி. மரிய ராஜேஸ்வரி வானொலி நாடகத்துக்குப் புதியவர் ஆனாலும்,—எவரும் நடிக்க விரும்பாத,—மிக இக்கட்டான பாத்திரத்தை ஏற்று திறம்பட நடித்ததினால் சிறந்த நடிகை என்ற பாராட்டைப் பெற்றுவிட்டார். நாடகத்தின் முழு வெற்றிக்குப் பின்னணிப் பாடகர்,— எஸ். துரை முக்கிய காரணமாக அமைந்துள்ளார். பிரபல பின்னணிப் பாடகர்களையே தோற்கடிக்கும் தன்மைபோல், கேட்போர் உள்ளம் நெகிழப் பாடியுள்ளார். குறிப்பாக "மலர் சிரிக்க" என்ற தொகையறுவுடன் ஆரம்பிக்கும் "வஞ்சம் தீர்க்கும் குலமே" என்ற கோஷ்டிப் பாடல் நாடகத்தின் உச்சக்கட்டத்திற்கு மேலும் உயர்ச்சி கொடுத்தது. இந்நிகழ்ச்சி விறுவிறுப்பாக அமைவதற்கு பின்னணி வாத்தியக்குழுவினர் கூடிய ஒத்துழைப்புக் கொடுத்துள்ளார்கள். இசையமைப்பாளர் எம். யே. தாஸ் அவர்களை எப்படிப் பாராட்டினாலும் பொருந்தும். கருத்துள்ள பாடல்களோடு கனகச்சிதமான வசனங்களை அமைத்திருக்கின்றார் கதாசிரியர் (நீ மரியசேவியர்). நாடகத்தின் இறுதிக்கட்டத்தில் பெயருக்கும் நாடகத்திற்கும் உள்ள தொடர்பு நல்ல முறையில் விளக்கப்படவில்லை. பாத்திரங்கள் சில சந்தர்ப்பங்களில் சம்பாஷிக்கும்போது சிறிது தாமதம் ஏற்பட்டதுபோல் இருந்தது.

மொத்தத்தில் திருமறைக் கலாமன்றம் மறைநெறிகளை கலை என்னும் அமுதினில் பொதிந்து, மக்களுக்கு வானொலி மூலம் உண்ணக் கொடுத்தார்கள்; இன்னும் கொடுப்பார்கள் என ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

—வலையன்மடம் தாவீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய புனிதர்களின் சிறிய வழி

இவ்வுலகில் உள்ள ஒருவருக்கும் சிறியவராகக் கருதப்பட விருப்பமில்லை. ஆனால், சிறியவர்களாக வரும்படி தேவமனிதன் எல்லோரையும் அழைக்கிறார். சின்னத்திரேசம்மாள் சிறியவளாய் வந்ததினால் பெரியவளானாள். மண்ணுலகத்திற்குரியவள் விண்ணுலகத்தவளானாள். அவள் தன்னை யேசுவுக்கு முற்றாகக் கையளித்தாள். யேசுவின் கரம் அவளுக்கு வல்லமையை அளித்தது. புனித இஞ்ஞாசியாரின் உத்தம வார்த்தையைக் கேட்டு மனம்மாறினார் சவேரியார். தேவன் அவரை ஆட்கொண்டார். நாம் அளிப்பது நம்மை. தேவன் அளிப்பது தம்மை. இதை உணர்ந்த திருவள்ளுவர்,

"தினைத்துணை நன்றிசெயினும்
பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்"

எனக்கூறியுள்ளார். தினையைப் பனையாக்குவது எல்லாம் வல்ல தேவன். அவரே எல்லோரின் இருதயங்களையும் அறிந்தவர். இதுபோல்தான் ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவனின் அந்தஸ்தின் கடமைகளும். அவன் காட்டவேண்டியது நல்மனம் மாத்திரமே. சமாதானம் அளிப்பவர் தேவன். இதற்காகவே யேசு சிறு பிள்ளைகளைத் தம்மிடம் வரவிடும்படி கேட்டார். பிள்ளைகள் வளருவதை விரும்பும் பெற்றோர் அவர்களை என்றும் யேசுவாழும் ஆலயங்களாக வைத்திருக்க முயலவேண்டும். வீட்டிலோ, பாடசாலையிலோ, சர்வகலாசாலையிலோ, கடைசியாகச் சமூகத்திலோ பிள்ளைகளின் மனப்பான்மை அவர்களில் இருக்கவேண்டும். தேவன் அவர்களை என்றும் ஆளவேண்டும்.

### நற்றாளைத் தொழுதல்

"கற்றதனால்ஆய பயனென்
கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

என்று பாடினார் வள்ளுவர். ஒரு குடும்பத்தில் ஒருபிள்ளை பிறக்கிறான். பெற்றோரும் மற்றோரும் அவனின் நன்மையையே விரும்புகிறார்கள். அதனைப் பூரணப்படுத்த அவர்களால் முடியாது. வீட்டிற்கு மேலான இடம்ஒன்று இருக்கிறது. அது வீட்டைக் கடந்தது. அதுவே பாடசாலை. அது அளிக்கும் நன்மையை நோக்கியே அதை விரும்புகிறார்கள். பாடசாலைக் கல்வி முடிய சர்வகலாசாலைக்கும் அனுப்புகிறார்கள். அதுவும் நன்மையளிக்கிறதென்று நம்புகிறார்கள். அது விஞ்ஞானக் கல்வியையூட்டி அஞ்ஞானத்தைக் கூட்டுமென்றால் அச்சர்வகலாசாலையைத் தவிர்த்து வேறு கலாசாலையைத் தேடுகிறார்கள். எல்லாம் சன்மார்க்கத்திற்கு வழியாய் இருக்கவேண்டும். எல்லாத் தெரிதலினதும் நோக்கம் நன்மையே. நன்மை, சன்மார்க்கம் என்னும் இலட்சணமே எல்லோரையும் சதாஉந்துகிறது. இதுவே எல்லாவற்றையும் கடந்தது. இதுவே தனி நன்மைத்தனம். இது ஒப்பற்றது. இதையே மனிதன் என்றும் எவ்விடத்திலும் விரும்பவேண்டும். சகல சாஸ்திரங்களையும் குறைவறப் பயின்று முடித்தபின் ஒரு பிள்ளை சேவைசெய்ய ஆரம்பிக்கிறான். அவனில் சன்மார்க்கம் நிறைந்திருந்தால் சுயநலம் ஒழிந்துவிடும். அவனே உத்தம தொடன். எல்லாம்கடந்தவர் அவனை ஆட்சிசெய்தால் அவனின் தொண்டும் உத்தமமாய் இருக்கும். இதைக்குறித்தே வள்ளுவர் கடவுளின் பாதத்தில் பெறும் சீவியமே உத்தமமென்றும் அவ்வாறு செய்யும் தொண்டு இறைவனின் பாதத்தில் இடும், என்றும் நறுமணம்

பி. ஜே. அமிர்தநாயகம்

வீசும் மலராயிருக்குமெனக் கூறுகிறார். சத்தியமும் சீவியமுமாகிய அன்பரைத் தரித்து அவரின் அன்பை எல்லோருக்கும் பரிமாறுதலே உத்தம சகோதரத்துவம்.

### நன்மைத்தனமானவரே வசீகரம் செய்வர்

தாவரங்களை அவதானிப்போம். அவைகள் நிலத்திலிருந்து தங்கள் உணவைத் தயாரித்துக் கொள்ளுகின்றன. அதேபோல் மிருகங்களும் செய்கின்றன. வேறு மிருகங்களையும், தாவரங்களையும் புசித்து, தங்கள் சீவியமயமாக்குகின்றன. வசீகரிக்கின்றன. மனிதன் மிருகத்தைப் போலல்ல. அவன் பகுத்தறிவுடையவன் அழியாத ஆன்மா உடையவன். தேவனின் சாயலாகப் படைக்கப்பட்டவன். அஞ்ஞானமளிக்கும் உலகமையத்தைத் தவிர்த்து, மெய்ஞ்ஞானம் அளிக்கும் தேவமையத்திற்காகப் படைக்கப்பட்டவன். தேவனைநோக்கிச் செல்லக்கூடியவன். சுயநலத்தைப் போக்கி ஒப்பற்ற நன்மைத்தனமானவரால் வசீகரம்செய்யப்படக் கூடியவன். இறைமகனாகக்கூடியவன். தேவனாலும், தேவனோடும், தேவனிலும் வாழக்கூடியவன். தேவனின் உத்தம அழைத்தலைப் பெற்றவன். வள்ளுவர் கூறுவதுபோல் நற்றாள் சேரக் கூடியவன்.

### நற்கருணைநாதரும் நமது சீவியமும்

எப்படி மனிதன் இறைமகனாக முடியும்? எப்படி அவனைத் தேவன் தன்மயமாக்க முடியும்? இதற்காகவே தேவன் மனிதனானார். இதற்காகவே அவர் சிலுவையில் பலியானார். அவரோடு பலியாகி அவர் அளிக்கும் நற்கருணை விருந்தில் பங்குபெறுபவர் அவரால் வசீகரிக்கப்பட்டு அவர் மயமாகிறார்கள். நித்திய அன்பாகிய அவரின் ஒப்பற்ற கருணையை எந்த மனிதனும் அடையக் கூடியதாய் இருக்கிறது. அதைப்பெற ஆசைப்படுவோர் ஒருவரையும் அவர் தவிர்ப்பதில்லை. ஆ! புனிதர்களின் போசனமே! ஆச்சரியமான விதமாய் எம்மை ஆட்கொள்ளச் சித்தமானீர். மேலானவர், ஒப்பற்றவர், எல்லாம்கடந்தநன்மைத்தனமானவரென்று உம்மை விசுவாசிக்கும் மனிதன், எப்படி உமது நன்மைத் தனத்தை விரும்பாதிருப்பான்? அழிந்துபோகும் நன்மைகளைத்தேடி அவற்றுடன் மடிந்துபோகாது அழியாத ஒரே நன்மைத்தனமான உம்மை அளிக்க நீரே சித்தமானீர். நித்திய ஆனந்தமாகிய உம்மையே நாமெல்லோரும் அடையக் கிருபைகூர்ந்தருளும். நீர் காட்டிய உத்தம பாதையை நாமெல்லோரும் நேசித்து, அதிலே வழிநடந்து செல்லக் கிருபைகூர்ந்தருளும். சாந்தமும் தாழ்ச்சியுமுள்ள சின்ன யேசுவே எம்மைச் சின்னப்பிள்ளைகளாக்கியருளும்.

### யேசுவின் பாதை

சிலுவை என்றால் மனிதன் திகிலடைகிறான். அதைத் தவிர்க்கவும் நீக்கவும் மிகவும் கஷ்டப்படுகிறான். அதைச் சபிக்கிறான். திட்டுகிறான். ஆனால் இது இடையில்வந்த நியாயம். நித்திய சிலுவையாகிய நரகத்தைப் போக்கி, நித்திய பரமானந்தமாகிய மோட்சத்தை எல்லோரும் பெறவே எங்களாண்டவராகிய யேசு அன்போடு தமது சிலுவையை அரவணைத்தார். அவருடைய சீடர்கள் எல்லோரினதும் வரலாறும் அதுவே. காந்தி மகாத்மாவானதெப்படி? ஒரு கன்னி தாய்மையென்னும் தனி இலட்சணத்தால் துலங்குவது எப்படி? அவள் ஒரு சிறந்த கோயில் என்று அழைக்கப் படுவதேன்? எல்லாம் அவர்கள் சுமந்தசிலுவையால்தான். கத்தியால் வெட்டுவது துன்பம் தான். ஆனால், அது அத்துடன் நிற்பதில்லை. ஆரோக்கியமளிப்பதென்றால் அதுவும் விரும்பத்தக்கது. எல்லா ஆரோக்கியத்தின் சம்பூரணமே கடவுள். அன்பர் தன் பூரண ஆரோக்கியத்தை எல்லோருக்கும் அளிக்கவே மனிதனானார். அவர் சிலுவையைத் தழுவிச் சிலுவையில் மரித்தார். "அன்பு என்பதும், தெய்வம் என்பதும் ஒன்று அல்லவோ?" கடவுளின் அன்பு வரம்பற்றது. எல்லாம் வல்ல அன்பர் எல்லோரையும் தன் அன்பின் ஆட்சிக்குள் சேர்க்கவே மண்ணுலகில் இருந்து விண்ணுலகப் பாதையாகத் தமது திருச்சிலுவையை அமைத்தார். அவரின் சிலுவையின் சம்பாவனையே நித்திய சீவியம். அதுவே பரமானந்தம். யேசுவின் அன்பின் சிலுவையே பெரிய புனிதர்களை ஆக்கும் சிறியவழி.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

மண்கும்பான் புனித அந்தோனியாரிடம் யான் இரந்துகேட்ட மன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன் நன்றியாக இதனைப் பிரசுரிக்கின்றேன். இவரது நாமம் புகழப்படுவதாக.


## பிரான்சீஸ்கன்சபை அழைக்கிறது

இச்சபையில் சேர்ந்து தங்களைத் தேவசேவைக்கு அர்ப்பணிக்க விரும்புகிறவர்கள் (ஆண்கள்) மார்கழி மாதம் 15-ந்தேதிக்குமுன் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பித்து, தொடர்பு கொள்ளவும்.

Very Rev. Bro Superior General,
Franciscon Friary,
116, Vihara Road, Matala.


# "ஏழைகளின் சிறிய மனிதன்"
## பார்புகழும் அசீசி அண்ணல்

— வெனீசியஸ் பர்னுண்டோ F. B. M.

12-ம் நூற்றாண்டில் சிலுவை யுத்தங்களின் வெற்றியினால் கத்தோலிக்க உலகம் பெருமை சாற்றிக்கொண்டிருந்தது. எந்தச் சின்னத்தைத் தங்கள் போர்க்கருவிகளிலே பொறித்து சமர்புரிந்தார்களோ அதே சின்னத்தின் உண்மை அர்த்தத்தை மறந்து, அந்தச் சிலுவைநாதரின் பண்புகளைக் காற்றிலே பறக்கவிட்டு பேராசைப் பித்தர்களாய் மதபேத, சாதிபேத, நிறபேத, மொழிபேத துவேஷத்தால் அலைக்கழிக்கப்பட்டு, பலவித போராட்டங்களில் மனதைச் செலுத்தி, இன்பசுகபோகங்களிலும், களியாட்டங்களிலும் உழன்றுகொண்டிருந்த காலத்திலே நெறி கெட்டழிந்து கொண்டிருக்கும் சமுதாயத்தைத் திருத்தி அமைத்துச் சிலுவையின் அர்த்தத்தைப் புரியப் பண்ணி, சிலுவைநாதனின் பண்புகளை வாழ்ந்துகாட்டி, மக்களைக் கிறிஸ்துவின் அண்டையில் கொண்டுசேர்க்க அதே நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் — அதாவது 1182-ல் தோன்றினார் அசீசி நகரின் தவப்புதல்வன் புனித பிரான்சீஸ்,



மழலைப் பருவம்முதல் தருமெநறியில் வளர்க்கப்பட்ட இவர் சிறிதுகாலம் தேசிய முன்னணியில் உழைத்தபின் உலகமும் அதன் இன்பசுகங்களும் நிலையற்றதென உணர்ந்தார். குஷ்டரோகியாகக் காட்சியளித்த கிறிஸ்து பெருமானின் தரிசனை இவரது ஞான வாழ்விற்கு உயிரூட்டியது.

இவரின் இப்புதுவாழ்விற்கு அசிசிநகர்ப்புறத்தில் அமைந்துள்ள பாழடைந்த புனித தமியான் இராயப்பர் கோயில் தஞ்சமளித்தது. ஒருநாள் இவர் அக்கோயிலில் உள்ள பாடுபட்ட சுரூபத்துக்குமுன்னால் செபத்தியானத்தில் ஆழ்ந்திருக்கும் சமயத்தில் அச் சுரூபத்தினின்று ஒரு குரற்சப்தம் உண்டாகி, "பிரான்சீஸ், இடிந்து தகர்ந்திருக்கும் என் தேவாலயத்தைச் செப்பனிடு" என்று சொல்லக் கேட்டார். இப்படி மூன்றுமுறை சம்பவித்தது. இதன் அர்த்தத்தைத் தவறுகப் புரிந்துகொண்ட பிரான்சீஸ் உடனே வீடுசென்று தன் தகப்பனுடைய பணப்பெட்டியைத் திறந்து பெருந்தொகையானபணத்தை எடுத்துவந்து கோயில் கட்டட நிதிக்காகப் பங்குச் சுவாமியாரிடம் கொடுத்தார். தகப்பனின் குணத்தை ஏற்கனவே அறிந்திருந்த சுவாமியார் பணத்தை ஏற்கமறுத்தார். பிரான்சீஸ் அப்பணத்தை அவ்விடத்திலேயே போட்டுவிட்டுச் சென்றார்.

மகனின் செயலை அறிந்த தகப்பன் கடுங்கோபம்கொண்டவராய் மகனுக்கு விரோதமாய் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இவ்வழக்கு சமயசம்பந்தமானதினால் நீதிமன்றத்தார் இதை அவ்விடத்தின் மேற்றிராணியாராய் இருந்த குவிடோ ஆண்டகையிடம் ஒப்புவித்தார்கள். குறித்த ஒருநாளில் ஆண்டகையின் வாசஸ்தலத்தின் முன்னிருந்த சதுக்கத்தில் வழக்கு நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் இவ்வழக்கைப் பார்க்கக் கூடினார்கள். ஆண்டகை அவர்கள் எதிர்வாதியைப் பார்த்து: "நீ திருச்சபைக்குச் சேவைசெய்ய வேண்டுமானால் நற்கிருத்தியங்கள் என்றபோர்வையில் இவ்விதம் அடைந்துள்ள பணத்துக்கு உனக்கு உரிமையில்லை. ஆகையால் தகாத முறையில் நீ வைத்திருக்கும் பணத்தை உன் தந்தையிடம் திருப்பிக் கொடுத்துவிடு" என்றார்.

(மறுபக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கல்விப் பரீட்சை 1970.

(மாதிரி வினுக்கள்)

## ஐந்தாம் வகுப்பு

நேரம் : ! மணி.

1. குறிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களிலிட்டு நிரப்புக.
   அ. நான் ஞானஸ்நானம் பெற்றபோது ………… அருளைப் பெற்றேன்.
   ஆ. ஆன்மாவின் அருள்வாழ்வைக் கொல்லுவது…… ………… ஆகும்.
   இ. உன் அயலானுக்கெதிராகப்……………… சொல்லாதிருப்பாயாக.
   ஈ. தேற்றுகிறவராகிய……………… ஸ்துதிக்கப்படுவாராக.
   உ. பாஸ்குக் காலத்தில் என்கிலும்……………… உட்கொள்வாயாக.

2. சரியாயின் "√" என்றும், பிழையாயின் "×" என்றும் எழுதுக.
   (அ) அற்ப பாவத்துக்குத் தண்டனை நரகமாகும் …..
   (ஆ) சருவேசுரனுக்கு உகந்த பலி சிலுவைப்பலியாகும் …. …
   (இ) பொதுத்தீர்வையின் பின் உத்தரிப்பு ஸ்தலம் உண்டு … …
   (ஈ) மனஸ்தாபப் பட்டாலும் மன்னிப்பில்லை ………
   (உ) கடமையிற் தவறியதால் பாவஞ்செய்கிறோம் …..

3. பின்வருவன யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
   (அ) மகனே அவர்களுக்கு இரசம் போதாதே
   (ஆ) ஆண்டவரே நீர் என் இல்லத்தில் எழுந்தருள நான் தகுதியுள்ளவனல்ல.
   (இ) குழந்தாய் எழுந்திரு.
   (ஈ) ஆண்டவரே நீர் இங்கே இருந்திருந்தால் எங்கள் சகோதரன் இறந்திருக்க மாட்டான்.
   (உ) இதோ மனிதனைப் பாருங்கள்.

4. அடைப்புக்குள் இருக்கும் சொற்களுள் பொருத்தமான சொல்லின் கீழ்க்கீறிடுக.
   (அ) உள்ளத் தூய்மையுடையவர்கள் கடவுளை (காணமாட்டார்கள், காண்பார்கள்; தூஷிப்பார்கள்)
   (ஆ) யேசுநாதர் புதுமையாகப் பெருகச்செய்தது (தவளைகள், அப்பங்கள், வெட்டுக்கிளிகள் )
   (இ) காயின் பொருமையால் தன் தம்பி ஆபேலை (அடித்தான், முத்தமிட்டான், கொன்ருன்.)
   (ஈ) யேசு சிறுவர்களை (நேசித்தார், வெறுத்தார், துரத்தினர்.)
   (உ) யேசு ஜெத்சேமினித் தோட்டத்தில் பரமபிதாவைப் பார்த்து, (படித்தார், கதைத்தார், வேண்டினர்)

5. பின் வருவனவற்றிற்கு ஒருசொல்லில் விடைஎழுதுக.
   (அ) யேசு நாற்பதுநாள் வனந்தரத்தில் யாது செய்தார்?
   (ஆ) யேசுவை மறுதலித்த சீஷன்.
   (இ) யேசுவுக்குத் தீர்வையிட்ட அதிகாரி,
   (ஈ) யேசு மரணமடைந்த இடம்.
   (உ) யேசு மரித்தபோது அவரருகில் நின்ற சீஷன்.

6. "அ" பகுதிக்குப் பொருத்தமான சொல்லை "ஆ" பகுதியிலிருந்து தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை "அ" பகுதியுடனிணைத்து எழுதுக;

| அ | | ஆ |
|---|---|---|
| அ. உலகமுடிவில் நடக்கும் தீர்வை. | …… | 1. ஆரும் சின்னப்பர். |
| ஆ. யேசு மரித்தநாள் | …… | 2. சீமோன். |
| இ. பொதுத்தீர்வையின் போது யேசுவின் இடதுபக்கத்தில் நிற்பவர் செல்லுமிடம். | …… | 3. பொதுத்தீர்வை. |
| ஈ. திருச்சபையை ஆளும் தலைவர் | …… | 4. நரகம். |
| உ. யேசுவுக்கு சிலுவை சுமக்க உதவியவர் | …… | 5. பெரிய வெள்ளி. |

7. பின்வரும் சொற்கூட்டத்தில் பொருத்தமான சொற்களைக் கீறிடுக,
   (அ) சிலுவை, சிங்காசனம், முள்முடி, கசை
   (ஆ) ஊதாரிப்பிள்ளை, விதைவிதைக்கிறவன், நல்லகள்ளன், திமிர்வாதக்காரன்.
   (இ) தாழ்மை, அபகரித்தல், பொறுமை, கற்பு.
   (ஈ) மார்த்தாள், சூசையப்பர், மரியாள், லாசர்.
   (உ) திருப்பலி, வாணவிளையாட்டு, மாலையாராதனை, சகாயமாதா ஆராதனை.

8. பின்வரும் வினுக்களுக்கு விடைதருக?
   (அ) சாவான பாவமாவது என்ன?
   ………………………………………………

(5-ம் கலம் பார்க்கவும்)

# மறைக்கல்விப் பரீட்சை — 1970

(மாதிரி வினுக்கள்)

## நான்காம் வகுப்பு

நேரம் 1 மணி

1, சரியாயின் '√' என்றும் பிழையாயின் '×' என்றும் குறிப்பிடுக.
   (அ) கடவுளைச் சார்ந்த புண்ணியங்கள் விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம். ( )
   (ஆ) முதல் மனிதன்மூலம் மனுக்குலத்திற்கு உண்டான தோஷம் சாவான பாவம். ( )
   (இ) யேசுவுக்காக முதல்முதல் உயிர்துறந்த வேதசாட்சிகள் மாசில்லாக் குழந்தைகள் ( )
   (ஈ) சாவான பாவத்துடன் மரித்த ஒருவனின் ஆன்மா உத்தரிப்பிடஞ் செல்கிறது: ( )
   (உ) இஸ்ராயேல் மக்களை விடுதலைசெய்யக் கடவுளால் அழைக்கப்பட்டவர் ஈசாக். ( )
   (ஊ) அடிக்கடி பாவசங்கீர்த்தனஞ் செய்தல் நல்லதல்ல, ( )
   (எ) கடவுள் எங்கும் இருக்கிருர். ( )
   (ஏ) ஞானஸ்நானம் பெற்றவுடன் ஒருவன் கடவுளின் பிள்ளையாகிருன். ( )
   (ஐ) மரியாய்க்கு மங்கள வார்த்தை கூறிய தேவதூதன் மிக்கேல், ( )
   (ஒ) கடின வியாதியாயுள்ள ஒருவர் ஞாயிற்றுக் கிழமை பூசைப்பலியில் பங்குபற்ருது விட்டமையால் சாவான பாவத்தைக் கட்டிக்கொள்கிருர். ( )

2. கீறிட்ட இடங்களை நிரப்புக.
   (அ) கர்த்தர் கற்பித்த செபம் ……… .. ………மந்திரம்,
   (ஆ) மார்த்தாள் மரியாளின் சகோதரன் …………….. ..
   (இ) அருளப்பரின் தாயார் ………………………………
   (ஈ) ………………………கடவுளின் உண்மையான மகன்.
   (உ) …………………அப்போஸ்தலர்களைப்போல் அதிகாரமுடையவர்.

3: பின்வருவன யாரால் யாருக்குக் கூறப்பட்டது,
   (அ) "பெண்களுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே" …… ……… ……………… ………………
   (ஆ) "ஒரு வாள் உமது இருதயத்தை ஊடுருவும்." … ……… . ……… …. ……………… ……………
   (இ) "நீங்கள் அஞ்சவேண்டாம்: உங்களுக்கு ஒரு நல்ல செய்தி கொண்டுவந்திருக்கிறேன்." ……………… …..
   (ஈ) "என் தந்தையின் வீட்டில் நான் இருக்கவேண்டுமென்பது உங்களுக்குத் தெரியாதே." ………… …..
   (உ) "இது செபிக்கும் வீடு."

4, அடைப்புக் குறிக்குள் இருக்கும் சரியான சொற்களைத் தெரிந்து பின்வரும் வாக்கியங்களில் கீறிட்ட இடங்களை நிரப்புக.
   (இரட்சகர், தேவநற்கருணை, பாக்கியவாளர், அப்பம், யேசுக்கிறீஸ்துநாதர்.)
   (அ) யேசுநாதர் தம்மை விசுவசிக்கும் மக்களுக்கு அளித்த சீவிய அப்பம் .. …………..
   (ஆ) இரக்கமுள்ளவர்கள் …… ……. . ………ஏனெனில் அவர்கள் இரக்கமடைவார்கள்.
   (இ) யேசு என்னும் பெயரின் பொருள் ………………
   (ஈ) சர்வேசுரனுடைய இராச்சியத்தில் ………………… புசிக்கிறவனே பாக்கியவான்.
   (உ) ……… …………கத்தோலிக்க திருச்சபையை ஏற்படுத்தினர்.

5. சரியான சொல்லின்கீழ் கீறிடுக.
   (அ) தேவதிரவிய அனுமானங்களின் தொகை (பத்து, ஏழு. ஐந்து.)
   (ஆ) கிறீஸ்துநாதர் இவ்வுலகில் சீவித்த காலம் (மூன்று வருடம், நாற்பதுநாள், முப்பத்து மூன்று வருடம்.)
   (இ) இலங்கையில் அனுசரிக்கப்படும் கடன்திருநாட்கள் (ஐந்து, பன்னிரண்டு, ஏழு,)
   (ஈ) பெண்களுள் சிறந்தவர்கள் (ஏவாள், எலிசபேத்தம்மாள், மரியாள்,)
   (உ) கிறீஸ்துவின் பிறப்பிடம் (பெத்தலேகம், ஜெருசலேம், பெத்தானியா )

6. ஒரு சொல்லில் விடை தருக,
   (அ) யேசுநாதருடைய அப்போஸ்தலர் ஒருவரின் பெயரை எழுதுக? …………………………………
   (ஆ) இப்போதிருக்கும் பாப்பரசரின் பெயர் என்ன? … . … ……… …… . ………………………………
   (இ) கடவுள் மனுக்குலத்துக்கு அளித்த இரட்சகர் யார்? ………………………… ………
   (ஈ) யாக்கோபு மிகவும் நேசித்த புத்திரனின் பெயர் என்ன? .. ……………………… ……… … ……
   (உ) களவெடுத்தலை விலக்கும் கற்பனை எது? …………
   (ஊ) இஸ்ராயேல் மக்களுக்கு வனந்திரத்தில் கடவுள் அளித்த உணவென்ன? ………………………………

# ஏழைகளின் சிறிய…

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரான்சீஸ் உத்தாரமாக: "ஆண்டவரே! நீர் சொல்லியபடி மாத்திரமல்ல அதற்கதிகமாகவும் சந்தோஷத்துடன் செய்வேன்" என்று சொல்லித் தன் வஸ்திரங்களையெல்லாம் களைந்து கையில் எடுத்துக்கொண்டு பணமுடிப்புடன் தகப்பன்முன்னின்று, "என் தகப்பன் ஆசித்து விரும்பும் பணத்தை மாத்திரமல்ல, அவரிடமிருந்து நான் பெற்றுக்கொண்ட உடைகளையும் அவரிடம் திருப்பிக் கொடுக்கிறேன்" என்று எல்லாவற்றையும் தகப்பன்முன் வைத்துவிட்டு, "இதுவரை பியேத்ரு பெர்னுடோ என்பவரை என்தந்தையென்று அழைத்தேன்; இனி பரலோகத்தில் இருக்கிற தந்தையை என் பிதாவே என்று மனப்பூர்வமாய் அழைப்பேன்" என்ருர். இச்சம்பவத்தைக்கண்ட எல்லோரும் கண்ணீர் சிந்தினர்கள். மேற்றிராணி ஆண்டகை சிறுவனின் தைரியத்தையும் கடவுளின் நம்பிக்கையையும் கண்டு இரக்கமுற்று தான் அணிந்திருந்த மேற்போர்வையால் பிரான்சீசை மூடிக்கட்டி அணைத்துக் கொண்டார்.

இப்படியாகப் பிரான்சீஸ் ஒன்றன்பின் ஒன்ருகவந்த துன்பங்களைத் தைரியமாய் மேற்கொண்டு தனது உன்னத அழைப்பின்மேல் உறுதிகொண்டார். கிறிஸ்துவின் தாழ்மை, தரித்திரம், இரக்கம், அன்பு என்பன இவரது வாழ்வின் மேல்வரிச் சட்டமாக அமைந்தன. இவரின் புனித சீவியமுறையினல் கவரப்பட்ட அநேகர் இவரின் சீடர்களாகவிரும்பினர். இவர்களைக்கொண்டு பிரான்சீஸ் மூன்று பெரும் சபைகளை ஏற்படுத்தினர்,

திருப்பாடுகள்மேல் இவர் கொண்டிருந்தபக்தி மிகவும் மேன்மையானது. தினமும் கிறிஸ்துவின் திருப்பாடுகளைத் தியானிப்பதும், கிறிஸ்து தமது பாடுகளால் மனுக்கு

(மறுபக்கம் பார்க்க)

### 5-ம் வகுப்பு பரீட்சை

(1-ம் கலத் தொடர்ச்சி)

   (ஆ) வசிகர நேரத்தில் குருவானவர் என்ன செய்கிருர்?
   ………………………………
   (இ) வாழ்க்கையில் எமது முதற் கடமை என்ன?
   ………………………………
   (ஈ) நாம் எவ்வாறு செபஞ் செய்ய வேண்டும்?
   ………………………………
   (உ) ஆன்மசோதனை என்ருல் என்ன?
   ………………………………

---

   (எ) ஸ்நாபக அருளப்பரின் தந்தை பெயர் என்ன?
   . …… …….. …… …
   (ஏ) திருச்சபையின் முதற் பாப்பு யார்? … ……
   (ஐ) சிலுவைப்பலியைப் புதுப்பிக்கும் பலிஎது?
   …… ………………
   (ஒ) தேவதூதனுல் கிறீஸ்துவின் பிறப்பு யாருக்கு முதல் அறிவிக்கப்பட்டது?
   ………………………………

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிட்னியில் பாப்பரசரின் உபசரிப்பாளர்

இவ்வருட இறுதியில் பரிசுத்த தந்தை அவுஸ்திரேலியதேச சிட்னிநகரில் தங்கியிருக்கும்போது அவரை உபசரிப்பவரில் பிரதானமானவர் அத்தேசத்தில் பாப்பரசரின் ஸ்தானிகராயிருக்கும் அதிமேற்றிராணியார் கினோ பாரூே அடிகளாரே. இவர் ஓர் இத்தாலியர். வட இத்தாலியிலுள்ள டிரெவிசோ மாகாணத்திலுள்ள பொன்செடியாவா என்னும் கிராமத்திலுள்ள வறிய ஒரு கமக்காரனுக்குத் தேவன் கொடுத்த பத்துப்பிள்ளைகளில் ஒருவர். இவரது தொண்டிற் பெரும்பாகம் வத்திக்கான் அரசாங்க தூதுவர் இலாகாவிலேயே கழிந்திருக்கிறது. எங்கெங்கு சென்றாலும் அரசாங்க தூதுவராக மிகவும் விருப்பத்துடன் வரவேற்கப்பட்டிருக்கின்றார். பாப்பரசரின் அவுஸ்திரேலிய விஜயத்தைப் பற்றிய விஷயங்கள் யாவையும் பாரூே அடிகளார் ஸ்தானிகர் காரியாலய ஆங்கிலபகுதிக் காரியதரிசி மக்கோர்மிக்சுவாமியாருடன் துரிதமாக ஆராய்ந்து வருகின்றார்.

## கிறீஸ்தவ ஒற்றுமைக்கு வழி

பெல்ஜியதேசத்து மறைநூல் விற்பன்னர் சுமார் 200 பேர் பிறசெல்ஸ் நகரத்திலே நடத்திய ஆலோசனைக் கூட்டத்தின்போது அத்தேச கருதினால் சுவென்ஸ் அடிகளார் பேசுகையில், கிறிஸ்தவ ஒற்றுமையின் அவசியத்தையும் அதை அடைவதற்குக் கடைப்பிடிக்கவேண்டிய முறைகளையும் எடுத்துக்காட்டினார். பழைய கிறிஸ்தவ சமயத்திலே பெரும் பிளவுகள் ஏற்படுமுன் இருந்த இனிய, தூய முறைகளை மாத்திரம் கைக்கொண்டு பின் எழுந்த வளர்ச்சிகளைத் தவிர்த்துக் கொண்டால் ஒற்றுமை காண்பது இலேசாகும் என அவர் சுட்டிக்காட்டினார்.

## இலங்கை கத்தோலிக்க சங்கம்

புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு இந்த நாட்டுமக்களின் பல சமூகத்தினரையும் அவர்களது ஆலோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு பிரதமமந்திரி கேட்டுக்கொண்டதற்கிணங்கி இலங்கைக் கத்தோலிக்க சங்கத்தினரும் தமது ஆலோசனைகளைச் சமர்ப்பித்திருக்கின்றனர். கத்தோலிக்கருக்கென விசேஷமான ஒரு சலுகையும் அவர்கள் கேட்கவில்லை. அவர்கள் கேட்பது நீதி நியாயத்தின்படி இந்நாட்டுச் சகல சமூகத்தினருக்கும் உகந்த முறையில் ஆட்சிசெய்யவேண்டுமென்பதே. தனிமனிதனுக்குரிய அடிப்படை உரிமைகளை அவர்களது மகஜரில் விரிவாகக் குறித்து புதிய அரசியல் திட்டம் அவைகளை அலட்சியம்செய்யாதிருக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றனர்.

அன்புடையீர்,

தாம் வாக்குறுதி கொடுத்தவண்ணம் ஆசீர்வாதம் பதிப்பகத்தோர் இம்மாதமுடிவில் எம் முதல் நூலை வெளியிட ஆயத்தமாயிருப்பர். இதை ஐவரின் அணிந்துரைகளுடன் யாம் வெளியிடுவாம். நூலை வாசித்தபின்னரையே இவ்வைவ்வரும் தம் அணிந்துரையை வரையக் கூடும். ஆனதினால் இஃதால் தாமதம் ஏற்படினும் ஏற்படும். உடனே, இவ்வணிந்துரைகளின்றி நூலை பெற விரும்பின், நீயிர் "ஆசீர்வாத அச்சகம், 32, கண்டி வீதி, யாழ்நகர்" எனும் மேல்விலாசத்துக்கு ஒரு தபால் அட்டை அனுப்பின், அங்ஙனமே தீவிரமாய்ப் பெறலாம். இந்நூலுக்குப் பணஞ் சேர்ப்போர் இப்பொழுதே தம் பணத்தை வண. J. A. பிரான்சீஸ் சுவாமியாரிடமும், தந்தோரின் பெயர் மேல்விலாசங்களைக் கலாநிதி ஹ. சி. தாவீதடிகள், மாதாவின்கோயில், தும்பளை, பரித்தித்துறை—இடமும் இம்மாதம் முடியவே அனுப்பவும்.

ஞானப்பிரகாசர் தாவீதடிகள் அகராதி ஆக்கக்குழு.

### பாப்பரசரது பிரயாணம்—ஒரு வாரம்

எதிர்வரும் கார்த்திகை மாத இறுதியில் பரிசுத்த தந்தை பிலிப்பைன், அவுஸ்திரேலியா தேசங்களுக்குச் செல்ல இருப்பதை யாவரும் அறிவர். இப்பிரயாணம் ஒருவார காலத்துள் நடந்துமுடியுமென இப்போது அறிவிக்கப்பட்டிருக்கின்றது. மணில்லா நகரைக் கார்த்திகை 27-ம் திகதி அடைந்து, அவுஸ்திரேலியாவைவிட்டு மார்கழி 3-ம் திகதி பரிசுத்ததந்தை வெளிகொள்வாரென அவ்வறிக்கை கூறுகின்றது. பாப்பரசர் 6-வது சின்னப்பதந்தை இதுகாலவரையும் செய்த உலக பிரயாணங்களுள் இதுவே காலத்திலும், தூரத்திலும் நீடித்ததாகும். இதுவரையும் அவர் முறையே பரிசுத்த நாடு, பம்பாய், நியூயோர்க் நகரிலுள்ள ஐக்கிய நாடுகளின் தலைமைக்காரியாலயம், போர்த்துக்கால், துருக்கி, கலம்பியா, யூகண்டா முதலிய இடங்களுக்குச் சென்றிருக்கின்றார். அவுஸ்திரேலிய விஜயத்துடன் உலகிலுள்ள எல்லாக் கண்டங்களையும் அவர் பாப்பரசராகத் தரிசித்த பெருமைக்குரியவராகிறார்.

### நன்றித்துதி

திரு இருதயநாதரின் இரக்கத்தினாலும், சதாசகாயமாதா, புதுமை மாதா, புனித யூதாததேயு, புனித சூசையப்பர், புனித அந்தோனியார், வியாகுல மாதா இவர்களிடம் மன்றாடினேன். நான் கேட்ட மன்றாட்டுக்கிடைத்தமையால் நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கிறேன்.

திருமதி. பி. தேவசகாயம்.

● ஆளில்லாமலே இயக்கச் சந்திரனில்போய் இறங்கிய லூனா 16 எனும் ருஷிய விண்வெளிக் கோளம் சந்திரமண்ணுடன் ருஷியாவிலுள்ள காஸ்போனாவில் திட்டமிட்டபடியே சேமமாக வந்திறங்கியதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. சந்திரனிலிருந்து தானாகவே இறங்கிப் புறப்பட்டுப் பூமியை அடைந்த முதலாவது செயற்கைக் கோளம் இதுவாகும்.

## 40 வேதசாட்சி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ரூம்சே தமக்குப் பிரதிநிதியாக ரோமாபுரியில் கடமையாற்றிவரும் ஸ்மித் அடிகளாரை நியமித்திருக்கிறார்.

### நன்றியறிந்த தோத்திரங்கள்

யேசுவின் திரு இருதயத்தின் இரக்கத்தினாலும், பற்பல புகழ்நாமம் பூண்ட தேவதாயாரினதும், பரிசுத்த சூசையப்பரினதும், வேண்டுதலாலும் நான் கேட்டுக்கொண்டபடி பயங்கர வியாதியின் நின்று காப்பாற்றப்பட்டுள்ளேன். இவர்கள் நாமம் புகழப்படுவதாக. நான் நினைத்த பிரகாரம் பிரசுரிக்கத்தாமதித்தமைக்கு மன்னிப்புக் கோரி நிற்கிறேன்.

ஓர் அடியாள்.

### திருமதி. மறிஞ பத்மினி அப்புத்துரை

அவர்கள் அமரத்துவமடைந்த

### 7-ம் வருட ஞாபகம்

| | |
|---|---|
| தோற்றம்: 16-2-43. | மறைவு: 4-10-63. |

"ஜீவியத்திலும் இவரை நாம் நேசித்தோம்; எமது செபங்களால் இவரை கர்த்தரின் வீட்டுக்குள் இட்டுச் செல்லும்வரை மறவாதிருப்போமாக." அன்னாரின் ஆன்மா சமாதானத்தில் இளைப்பாறக்கடவது. இவரின் ஆன்ம சாந்திக்காக எதிர்வரும் திங்கட்கிழமை 4-ம் திகதி காலை புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஒரு அக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் வருந்தும் கணவன், பெற்றோர், சகோதர சகோதரிகள்.

"பத்மினி"
பறங்கித்தெரு,
மன்னார்.

## திருக்குடும்ப...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

டுமென்றும், ஒரு ஆசிரியர் தேவதிரவிய அனுமானங்களைப்பற்றி ஆயிரமாயிரம் கேள்வி மறுமொழிகளைப் படிப்பிப்பதைவிட அவர் ஒருமுறை பாவசங்கீர்த்தனம் செய்து திவ்விய நன்மைபெறக்காண்பது அவர்களுக்கு அதிக நன்மையைப் பயக்குமென்றும், ஆணித்தரமாக அழுத்திக்கூறினர். தொடர்ந்து, புனிதசவேரியார் ஆண்கள் கல்லூரி ஆசிரியர் திருவாளர் சிறில் அவர்களால் பச்சாத்தாபம் என்னும் தேவதிரவிய அனுமானம்பற்றி அழகியதோர் மாதிரிப்பாடம் நடைபெற்றது. ஆய்வுக்குழு மேடைப்பேச்சு இவற்றுடன் அன்றையநாள் முடிவுபெற்றது.

மறுநாட்காலை ஒன்பது மணிக்கு வண. பிதா. L. R. ஜெயசீலன் அவர்கள் விவிலிய வழிபாட்டுடன் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து வண. பிதா. G. T. பாலசுந்தரம் அவர்களால் "மறைக்கல்வியில் புதியமுறைகள்" என்னும் விடயம்பற்றி விரிவான சிறந்ததோர் சொற்பொழிவாற்றப்பட்டது. பின்னர் இல்லறத் தொண்டர் சபைச் சகோதரர் மரிசலின் அவர்களால் "முதல் நன்மைக்கு ஆயத்தம் செய்யும் முறைபற்றி சிறந்த முறையில் மாதிரிப்பாடமொன்று நடைபெற்றது. தொடர்ந்து ஆய்வுக்குழுவும் மேடைப்பேச்சும் நடைபெற்று திவ்வியபூசைப் பலியுடன் காலைக்கருத்தரங்கு முடிவுபெற்றது.

பி. ப. இரண்டு மணிக்கு வண. பிதா. L. R. ஜெயசீலன் அவர்கள் திவ்விய பூசைப்பலியைப்பற்றிப் புத்தம்புதிய கருத்துக்களைத் தெள்ளிய தமிழில் அள்ளிச் சொரிந்து அனைவர் உள்ளங்களிலும் அருட்சிலை உண்டுபண்ணினார். தொடர்ந்து சங். சகோதரி சவேறினா என்பவரால் திவ்விய பூசையைப்பற்றி மாதிரிப்பாடம் கொடுக்கப்பட்டது. வழமைபோல ஆய்வுக்குழுவும் மேடைப்பேச்சும் இடம்பெற்றன.

ஈற்றில் பறப்பாங்கண்டல் தலைமையாசிரியர் திருவாளர் S. S. பீரிஸ் அவர்களால் நன்றித்துதி கூறப்பட்டது. வண. பிதா. G. T. பாலசுந்தரம் அவர்கள் தங்கள் வருத்தங்கள் கஷ்டங்கள் அனைத்தையும் பாராட்டாது எங்களிடையேவந்து இக்கருத்தரங்கை திறம்பட நடத்தியமைக்காகவும், மன்னார் மாவட்டக் குருப்பிரசாதிகள் அனைவரும் தங்கள் நிறைந்தவேலையும், கஷ்டங்களையும் பொருட்படுத்தாது இந்த இரண்டு நாட்களையும் எமக்கென அர்ப்பணித்து வேண்டிய அறிவுரைகளைத் தந்துதவியமைக்காகவும், ஆசிரியசங்கத்தின்பேரால் தமது பூரண நன்றியைத் தெரிவித்துநின்றார். அத்துடன் திருக்குடும்பக் கன்னியாஸ்திரிமார் இக்கருத்தரங்கின் பொறுப்பைக்கையேற்று, மிகத் திருப்திகரமான முறையில் இதை நடாத்தி வேண்டிய வேண்டிய உதவிகளையெல்லாம் பூரணமாய்த்தந்துதவியமைக்காகவும் தமது நன்றியைத் தெரிவித்து நின்றார். கடைசியாக திருமறைக்கல்வி ஆலோசகர் வண. பிதா. G. T. பாலசுந்தரம் அவர்கள் இக்கருத்தரங்கில் பங்குபற்றிய அனைவர்க்கும் தமது நன்றியைத் தெரிவித்து நின்றார்.

மாதாவின் தோத்திரப்பாடலுடன் கருத்தரங்கு இனிதே முடிவுற்றது.

## ஏழைகளின் சிறிய...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

லத்துக்குக் காட்டிய பேரன்புக்கு நன்றிகூறுவதும் இவருக்கு ஆனந்தமாயிருந்தது. இவர் இறப்பதற்கு இரண்டு வருடங்களுக்குமுன் இத்தாலியில் உள்ள அல்வேர்ணிய என்ற மலைஉச்சியில் செபத்தியானத்தில் ஆழ்ந்திருக்கும் சமயத்தில் கிறிஸ்துவின் ஐந்து திருக்காயங்களைப் பெற்றார். தம்மேல் பதிந்த கிறிஸ்துவின் திருக்காயங்களை எவ்வளவுதூரம் மறைக்க முற்பட்டாரோ அவ்வளவுதூரம் அது மற்றவர்களால் அறியப்பட்டது. இக்காயங்களினால் இவர் அளவிறந்த பாடுகளை அனுபவித்து 1226-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 4-ந்தேதி தனது 46-ம் பராயத்தில் தன் பரமபிதாவிடம் ஆவியை ஒப்படைத்தார்.

இவர் மரித்து இரண்டுவருடங்களின்பின் 9-ம் கிறகோரி பாப்பிறைபினால் புனிதர்கள் வரிசையில் உயர்த்தப் பெற்றார். இவரின் திருநாள் ஒவ்வொருவருடமும் ஐப்பசிமாதம் 4-ந்தேதி கொண்டாடப்படுகிறது. இப்புனிதரால் ஏற்படுத்தப்பட்ட பிரான்சிஸ்கன் சபை அகிலஉலகமும் பரவி இறைபணி ஆற்றிவருகிறது. தற்போதுஇச்சபையிலேகுருமாரும், சந்நியாசிகளுமாக 46,000 பேரும், கன்னியர் 1,92,000 பேரும், இல்லறவாசிகள் 30,00,000 பேரும் கற்பு, தரித்திரம், கீழ்ப்படிதல் என்ற வாக்குத்தத்தங்களால் தங்களை இறைவனுக்கு அர்ப்பணம்செய்து புனித பிரான்சீஸ் அசிசியின் கொடியின்கீழ் சேவைசெய்து வருகிறார்கள். இச்சபை தொடங்கி 700 ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டன. இச்சபையில் சேர்ந்து புனிதர்களாக மாறியவர்கள் 114 பேரும், முத்திப்பேறு பெற்றவர்களாக 214 பேரும் புனிதர்கள் வரிசையில் உயர்த்தப்படக்கூடியவர்கள் 2,000 பேரும் இருக்கிறார்கள்.

"ஏழைகளின் சிறிய மனிதன்" என்று தன்னை அழைத்துக்கொண்டு தரித்திரவாழ்க்கை வாழ்ந்த இப்புனிதருக்குச் சீடர்களாக இவ்வளவு பெருந்தொகையினர் சேர்ந்திருப்பதின் மர்மந்தான் என்னே!...... அன்று...... பாழடைந்த புனித தமியான் இராயப்பர்கோயிலிலே பாடுபட்ட சுரூபத்தின் வாயில்இருந்து வந்த வசனம், "பிரான்சீஸ்! இடிந்து தகர்ந்து கிடக்கும் என் தேவாலயத்தைச் செப்பனிடு" என்ற வாக்கியத்தின் உண்மை அர்த்தத்தை புனித பிரான்சீஸ் மாத்திரமல்ல அவரின் சீடர்களும் மற்றையோரும் தற்போது புரிந்திருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

### ஐப்பசி — 1970

| | | | |
|---|---|---|---|
| 4 | ஞாயிறு | வருடத்தின் 27-ம் ஞாயிறு | [ப] |
| 5 | திங்கள் | தினப்பூசை | [ப] |
| 6 | செவ்வாய் | தினப்பூசை | [ப] |
| 7 | புதன் | பரி. செபமாலை மாதா | [வெ] |
| 8 | வியாழன் | தினப் பூசை | [ப] |
| 9 | வெள்ளி | ,, | [ப] |
| 10 | சனி | ,, | [ப] |

*சத்தியவேத பாதுகாவலன்*

# வரங்களின் வற்றாத ஊற்று

மாதாவின் பக்திமுயற்சிகளில் மிகவும் பரந்தது செபமாலைப் பக்தியாகும். உலகமெங்கிலும் மக்கள் தம் ஆலயங்களிலும், இல்லங்களிலும் குழுமிச் செபமாலை ஓதுவதன்மூலம் தேவதாயாருக்குத் தம் அன்பையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள். மாதாவுக்கு இன்னும் எத்தனையோ பக்தி முயற்சிகள் இருந்தபோதிலும், செபமாலையே மக்களால் பெரிதும் விரும்பப்பட்டதும், அதன் வரலாற்றை நோக்குமிடத்துப் பலனுள்ளதுமாகும். இது எத்தனையோ இதயங்களின் துன்பச் சுமையை நீக்கி ஆறுதலளித்துள்ளது. எத்தனையோ சீர்குலைந்த இல்லங்களுக்கு அமைதியையும், மகிழ்ச்சியையும் கொண்டு வந்தது. எத்தனையோ பாவிகளை மனந்திருப்பித் திருச்சபையின் மடியிற் சேர்த்தது.

குழந்தைகளும், பாமர மக்களுந் தன்னும் விளங்கிக்கொள்ளக் கூடிய இந்த எளிமையான செபமே, தாழ்ச்சியும் எளிமையும் வாய்ந்த கன்னிகைக்கு மிகவும் பிடித்தமானதாகும். செபமாலை சொல்லும்போது தாயின் அரவணைப்பில் மழலைமொழி பேசும் குழந்தைகள் போலாகிவிடுகின்றோம்.

அறிவிலும், ஆன்மீகத்துறையிலும் முன்னேற்றமடைந்து வரும் இக்காலப் பொது மக்களுக்குச் செபமாலை மிக எளிமையான தொன்றாகத் தோன்றக்கூடும். ஆனால், எளிமையானது மட்டுமன்றி, ஆழமானதும் கூட. அதில் அடங்கியுள்ள தியானங்கள் மீட்பின் திட்டம் முழுவதையுமே அடக்கியுள்ளன. ஒவ்வொரு காரணிக்கத்திலும் இறைவன் தமது மக்களாகிய எமக்குச் செய்த பெருஞ் செயல்கள் நினைவூட்டப்படுகின்றன. இப்பரமரகசியங்களைத் தியானித்தால் அதன் விளைவாக அவற்றின் அர்த்தம் எம் சிந்தனையிலும், செயலிலும் ஊடுருவி நிற்கும். செபமாலை ஒரு எளிமையான செபமாக இருக்கலாம். ஆனால் மீட்பின் பரமரகசியங்களை அறிந்து விளங்கிக் கொள்வதற்கு அது ஒரு வழியாக அமைகிறது. செபமாலை ஓதுவதன் மூலம் நாம் உறுதியும், ஆறுதலும் பெறுவதோடு, இறைவனையும், அவரது செயல்களையும் தியானித்து வருவோம்.

தேவதாயாருக்குச் செலுத்தப்படும் இந்த விசேஷ செபம் பெரும் தொல்லையும், போராட்டமும் நிறைந்த வேளையில் மனிதனுக்கு அளிக்கப்பட்டது. அது மக்களைத் தவறான போதனைகளிலிருந்து காத்து இறைவனண்டை அழைத்துச் சென்றது.

எக்காலத்தையும் விட இன்று உலகுக்குச் செபமாலை தேவையாயிருக்கிறது. அதன் வழியாகப் "புண்ணியம் வளரும், பாவம் தேயும், தவறான போதனைகள் ஒழியும், தேவ திருவருள் மக்கள் மேற் பொழியப்படும். செபமாலை சகல விதமான வரப்பிரசாதங்களினதும் வற்றாத ஊற்றாக விளங்கும்" என்று தேவதாயார் தாமே கூறியதை நாம் மனதிற் கொள்ள வேண்டும்.

பதின்மூன்றாம் சிங்கராய பாப்பரசர் கூறியது போல், "செபமாலையின் சக்தி இன்னும் அதிகரிக்கும் என்ற உறுதியான நம்பிக்கை எமக்குண்டு. உலகின் பல்வேறு பிரதேசங்களில் இரவும் பகலும் மாறி மாறி வரும்போது தெய்வீக உண்மைகளைப் பற்றிய தியானம் உள்ளத்திலே நிறைய மக்கட்திரளின் உதடுகளிலிருந்து செபத்தின் குரலொலி ஒருமித்து எழுந்து கொண்டேயிருக்கும்."

# முன்னாள் மந்திரியாரான பங்குக் குரவர்

இங்கிலாந்திலே வடகென்சிங்ரன் நகரில் புனிதசாள்சின் சதுக்கத்திலுள்ள புனித பத்திநாதரின் கோவில் இன்று தனது பங்குக் குரவராக முன்னாள் மந்திரி ஒருவரைக் கொண்டிருக்கிறது. மோல்த்தா தீவிலிருந்து அங்கு சென்றுள்ள கப்புச்சின் சபையைச் சேர்ந்த வண. பேடினன்ட்ஸ் கலம்போ சுவாமியாரே இந்த முன்னாள் மந்திரியாவர். 65வயதுடையவரான இவர் மோல்த்தா தீவிலே தொழிற்கட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது 1947ஆம் ஆண்டு முதல் 1950ஆம் ஆண்டுவரை அதன் நிதிமந்திரியாய் இருந்தவர். 1957ஆம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கம் அத்தீவுக்குச் சுதந்திரம் அளித்தபோது, அதன் பொருளாதாரவளத்தை விருத்திசெய்யும்பணி இவரிலே சுமத்தப்படலாயிற்று.

அப்பொழுது இவர் அதன் வாழ்க்கைத்தரத்தை 60சதவிகிதம் உயர்த்தினார். வயோதிகர்களுக்கும் பென்ஷன் வழங்குவதற்கான சேமலாப நிதித்திட்டம் ஒன்றை நடைமுறைக்குக் கொணர்ந்தார். பிறநாடுகளிலிருந்து பெரும் வருமானத்தைத் தந்து கொண்டிருப்பதான பேரான தேசிய லொத்தரைத் தொடக்கித் திறமையோடு நடாத்திவந்தார், பின்னர் தொழிற்கட்சியில் பிளவுண்டாகவே, அப்போதுண்டான தொழிலாளிகள் கட்சி அரசாங்கத்தில் பிரதமராகவந்த சேர் போல் பொவ்வாவின்கீழ் தொடர்ந்து பணியாற்றிவந்து, சில மாதங்களின்பின் அரசியல் வாழ்க்கையிலிருந்து விலகிக் கொண்டார்.

அதன்மேல் 1951ஆம் ஆண்டு தைமாதம் டக்றர் பேடினன்ஸ் கலம்போ அவர்கள் கார்த்தூசியன் சந்நியாசசபையில் சேர்ந்துவிட்டாரென்ற செய்திபரந்தபோது, மோல்த்தாதீவு மக்களெல்லாம் பேராச்சரியம் அடைந்தார்கள். பின்பு கார்மிலான் நகரில் மூன்று வருடங்களுக்குமேல் வேதசாஸ்திரம் படித்து முடிந்ததும் குருப்பட்டம் பெற்றார். அதைத் தொடர்ந்து ஆஸ்திரேலியாவிலும், இந்தியாவிலும், எத்தியோப்பியாவிலும், றோமை நகரிலும் உயர்பதவிகள் வகித்திருந்தபின் கடந்தநான்கு ஆண்டுகளாக மோல்த்தாவிலே நீலக்கன்னிகாசபைக்கும், நோயாளிகளைப் பராமரிக்கும் அவர்களுடைய விடுதிக்கும் விசாரணைக்குரவராய் இருந்துவரலானார்.

தாம் சந்நியாசவாழ்க்கையில் பிரவேசித்ததில் கண்டடைந்த பலனைக்குறித்து அவரே பின்வருமாறு தெரிவித்திருக்கின்றார். "எனது தீர்மானத்தையிட்டு நான் ஒருபோதுமே கவலைப்படவில்லை. சந்நியாசவாழ்க்கையில் நான் மனச்சமாதானத்தைத் தேடினேன். அதைக் கண்டடைந்தேன். நான் முற்றிலும் மனப்பாக்கியமாய் இருக்கிறேன்."

## புகழ்ச்சிக்குரிய விசுவாசகாவலர்கள்

கம்யூனிஸ்த ஆட்சியிலுள்ள ஹங்கேரியிலே கிறிஸ்துசமயம் ஸ்தாபகமான ஆயிரமாம் ஆண்டுவிழாவை முன்னிட்டுச் சின்னப்ப பாப்பரசர் அந்நாட்டிலுள்ள 65 லட்சம் கத்தோலிக்க மக்களுக்கும் ஓர் அப்போஸ்தலிக்க திருமுகம் அனுப்பிவைத்து அதில் தாமும் கலந்துகொள்ளலாயினர்; அந்நாட்டிலே கம்யூனிஸ்த அரசாங்கத்தால் அதிகாரபூர்வமாக நடத்தப்படும் வேதகலாபனையையும், காண்பிக்கப்படும் பாரபட்சத்தையும் பற்றி நேர்முகமாக அவர் யாதும் அதிலே குறிப்பிடவில்லை. அங்கு புடாபெஸ்ற் நகரிலுள்ள அமெரிக்க ஸ்தானிகராலயத்தில் 1956ஆம் ஆண்டு முதல் அடைக்கலம் புகுந்திருக்கும் கருதினால் மின்ட்சென்ரி ஆண்டகையைப்பற்றித்தானும் அவர் யாதும் குறிப்பிட்டிலர். கடந்த நூற்றாண்டுகளிலே கிறிஸ்துவேதத்தின் புகழ்ச்சிக்குரிய விசுவாசகாவலர்களென்று ஹங்கேரிய மக்களை அழைத்து, மாற்றமடைந்திருப்பதும், "எதிர்காலத்தில் சந்தேகமின்றியே மாற்றமடையப் போவது"மான ஓர் உலகில் அவர்களுடைய வேதவிசுவாசம் மாற்றமடையாதிருப்பதாக எடுத்துரைத்து, தங்கள் நாட்டில் நிலைமைகள் மாறியிருப்பதால் ஹங்கேரிய மக்கள் தங்கள் வேதவிசுவாசத்தை விட்டுக்கொடுக்க மாட்டார்களெனத் தமது திருமுகத்தில் பாப்பரசர் வரைந்திருக்கிறார்.

# அமெரிக்க புதிய பைபிள்

ஆங்கிலம் பேசும் அமெரிக்க கத்தோலிக்க மக்கள் இம்மாதத்திலே வேதாகமத்தின் புதிய மொழிபெயர்ப்பு நூலைக் கொண்டிருப்பார்கள். இந்தப் புதியமொழிபெயர்ப்புநூல் கடந்த இரு நூற்றாண்டுகளாக அவர்கள் பிரயோகித்துவந்த துவாய் மொழிபெயர்ப்பினிடமாகப் பாவனைக்கு வருகின்றது. தற்கால புதுமாதிரியான இந்த மொழிபெயர்ப்பைச் செய்வதிலே கல்விமான்களின் கோஷ்டி ஒன்று கடந்த 25ஆண்டுகளாக ஈடுபட்டுவந்துள்ளது.

இது 1,565ஆண்டுகளுக்கு முந்திய லத்தீன் மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டு மொழிபெயர்க்கப்பட்ட பழைய வேதாகமத்தைப்போல் இராது, ஆதியான வேதாகம பாஷைகளான எபிரேய, கிரேக்க, அரமக்கிய மொழிகளிலிருந்து நேராக மொழிபெயர்க்கப்பட்டதாகும். அமெரிக்க மேற்றிராணிமார், அதிமேற்றிராணிமாரின் அங்கீகாரத்தைப்பெற்று, "புதிய அமெரிக்க பைபிள்"எனும் நாமத்துடன் இம்மாதம் 30ஆம் திகதி இது வெளிவரவிருக்கின்றது.

மேலும் இதன் மொழிபெயர்ப்பாளர்கள் சாக்கடலில் கண்டு பிடிக்கப்பட்டதோற்காகித சுருள்களைப் போன்றனவாய்ப் புதைபொருள் ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்த தற்கால சாதனங்களையும் பயன்படுத்தியிருக்கிறார்கள். இவைகள் வேதாகமம் சம்பந்தமாய் ஆதியான கருத்துகள்மட்டிலே அதிகம் சிறப்பான ஆழ்ந்த அறிவைத் தந்திருக்கின்றன. 20ஆம் நூற்றாண்டின் மனிதருக்கான பிழையற்ற உண்மையான மொழிபெயர்ப்பென்றும், நிரந்தரமான செயலென்றும் இது பாராட்டப்படுகிறது.

இந்த மொழிபெயர்ப்பிலே வேதனம் பெறாது நான்கு புரொட்டஸ்தாந்த பிரமுகர்கள் உட்பட 50கல்விமான்கள் பணியாற்றியிருக்கிறார்கள்; ஆனால், கையிட்டகருமம் கைகூடுவதைக் காணுமுன்னரே அவர்களில் 16 பேர் காலஞ்சென்றுவிட்டனர். இவர்களில் கடைசியானவர் அன்று வெள்ளிக்கிழமை காலஞ்சென்றவர், வாஷிங்ரன் நகரிலுள்ள கத்தோலிக்க சர்வகலாசாலையில் செமெத்திய பாஷைகள் போதிக்கும் பேராசிரியரான வண. லூயிஸ் ஹாட்மன் சுவாமிகளே.

● லண்டன் நகரிலே பஸ்களில் சலார்கொடாமல் தந்திரமாகப் பிரயாணஞ்செய்து தப்பிவிடுகிறவர்களால் பஸ் கூட்டுத்தாபனம் வருடமொன்றுக்குப் 10,000 பவுண் நட்டமடைகிறது. தற்போது அவர்களைச் சூட்சமாகக் கண்டுபிடிக்கக்கூடிய மாயக்கண் ஒன்று செய்யப்பட்டுப் பரிசோதனையில் இருந்துவருகிறது. இதன் மூலம் சாரதிகள் இலகுவிலே அவர்களைக் கண்டுபிடித்து விடுகிறார்களாம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நிக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமுனிவர் அச்சகத்தில் 1970ஆம் ஆடு ஐப்பசிமீ 3ஆம்உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம் 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org